
# நிறம்

கீதா தர்மராஜன் | சித்திரம்: சபா ஹஸன்



கதாவின் 300எம் திங்க்புக்



சிலர் கருப்பாக இருக்கிறார்கள்.
சிலர் வெள்ளையாக இருக்கிறார்கள்.

எதனால் இப்படி என்று நீங்கள்
யோசித்திருக்கிறீர்களா?
வியப்படைந்திருக்கிறீர்களா?
குழம்பியிருக்கிறீர்களா?

நம்முடைய தோலின் நிறத்திற்கு
நம் உடலில் இருக்கும் ஒரு
நிறமி தான் காரணம்.



அந்த நிறமியின் பெயர் மெலனின். அதுதான் நம்முடைய தோல், கண்கள் மற்றும் தலைமுடிக்கு நிறம் தருகிறது.

அதிக வெப்பமான இடங்களில் வாழ்பவர்கள் உடலில் இந்த மெலனின் அதிகமாக இருக்கும். ஏனென்றால் அவைதான் நம் உடல் சூரியவெப்பத்தால் கருகிவிடாமல் பாதுகாக்கும்.

அதாவது...கருமையான சருமம் இருப்பது வெளியில் சூடாக இருக்கும்போது குளிர்கண்ணாடி அணிவது போன்றது.



அதிக சூரிய வெளிச்சம் இல்லாத குளிர் பிரதேசங்களில் வசிப்பவர்களின் உடம்புசற்றே வெளிறிய நிறத்தில் இருக்கும்.

ஆனால், நமக்கெல்லாம் நன்றாகத் தெரியுமே, நிறைய நிறங்கள் இருந்தால்தானே நம்மால் ஹோலிப் பண்டிகையை ஜாலியாகக் கொண்டாட முடியும்!

அல்லது, விதவிதமான வண்ணங்களில் புடவைகள், பாவாடைகள், சட்டைகள் தயாரிக்க முடியும்!

நண்பர்களுக்கிடையே நிறம் முக்கியமேயில்லை!

**கீதா தர்மராஜன் :** குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதை மிகவும் விரும்புபவர். TARGET (செயல் இலக்கு) என்ற குழந்தைகளுக்கான இதழின் ஆசிரியர்களில் ஒருவர். மேலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் இதழான பென்சில்வேனிய கெஸட்டிலும் (The Pennsylvania Gazette) எழுதியவர் இலக்கியம் மற்றும் கல்விப் பணிகளில் குறிப்பிடத்தக்க சேவை செய்தமைக்காக இவருக்கு 2012 ஆம் ஆண்டு பெருமைமிகு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**சபா ஹாஸன்:** ஓவியர், புகைப்படக்கலைஞர், எழுத்தாளர். 1998இல் Hauz Khas Uneffaced என்ற தலைப்பில் இவரது ஓவியங்களின் கண்காட்சி நடந்ததிலிருந்து இவர் பல்வகையான ஊடகங்களில் இயங்கிவருகிரார். 2015இல் பல புதுமையான கல்விப் பயிலரங்குகளும் கில்கரி போன்ற சமூக அளவிலான ஓவிய செயல்திட்டப்பணிகளும் நடத்தியவர். நியூ யார்க்கிலுள்ள ஸைராகுஸ் பல்கலைக்கழகம், பாரீஸிலிருக்கும் பிரெஞ்சு கலாச்சார அமைச்சகம் (2006) கொழும்புவில் உள்ள ஜார்ஜ் கேய்த் கலை அமைப்பு (2002), ஸால்ஸ்பர்கில் உள்ள ஆஸ்கார் கோக்கோஷ்ச்கா அகாதெமி (2010) முதலியவற்றின் சர்வதேசிய ‘பெலோஷிப்’ பெற்றவர். 2005இல் ஓவியங்களுக்காக ரசா தேசிய விருது இவருக்கு வழங்கப்பட்டது.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

# KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

‘‘இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா’’

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 1995, 2021
பிரதியின் காப்புரிமை © கீதா தர்மராஜன்
சித்திரங்களுக்கான காப்புரிமை © கதா
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.




குழந்தைகளோடு சேர்ந்து இவற்றைப் படியுங்கள். அவர்கள் உலகைக் கற்பனையால் வண்ணமயமாக்குங்கள்.

300M CHALLENGE ! -
இணைந்துகொள்ளுங்கள் இன்றே!
குழந்தைகளுக்கு சந்தோஷமாகவும் சுவாரசியமாகவும் அர்த்தமுள்ளதாகவும் உள்ள ஒரு புதிய உலகை உருவாக்குங்கள்.
இதில் இணைந்துகொள்ள : 300m@katha.org
வாலண்டியராக பங்கெடுக்க தொடர்புகொள்ளவும்: volunteer@katha.org

ஐ.எல்.ஆர் நூலகம் தனித்துவமான புத்தகங்களின் தொகுப்பாகும். வாசிக்கத் தயங்கும் குழந்தைகளும் விரும்பி வாசிக்கத் தொடங்குவார்கள்! சுவாரசியமாக வாசிக்கப் பழகி வாசிப்பின் பல நிலைகளைக் கடந்து தேர்ச்சி பெறுவார்கள்.

சிறந்த உள்ளடக்கமும் அதற்கேற்றாற்போன்ற வடிவமைப்பும் கொண்ட புத்தகங்கள் வாசிப்பின் வெவ்வேறு நிலைகளில் உள்ள குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. இந்த நூலகம் இந்தியாவிலிருந்தும் உலக நாடுகளிலிருந்தும் பல அருமையான, தரமான இலக்கியப் படைப்புகளை சேகரித்து வைக்கிறது. எங்களுடைய புத்தகங்கள் கீதா தர்மராஜனின் Story Pedagogy ‘கதை வழி கல்வி’ என்ற தனிச்சிறப்பான கல்விமுறையை பின்பற்றுகிறது. இந்தக் கல்விமுறை முதல் தலைமுறை வாசகர்களுக்கு வாசிப்பின் ஆனந்தம் கிடைப்பதற்கான வழிகளை அறிமுகப்படுத்துகிறது.

TADAA
மூலமாக :
(Think, Ask, Discuss, Act and Achieve)
யோசி
கேள்
விவாதி
செய்
சாதி

## இண்டிகோ தொடரில் இடம்பெறும்

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்







































**FOR OUR BOOKS**

www.books.katha.org

கதைகளின் வழியே
இந்தியாவின்
பல்கலாச்சார
அடையாளம்

— The Pioneer

for children
a katha book
ISBN 978-93-88284-81-3
9 789388 284813
www.katha.org
₹ xxx

மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்